# திறவுகோல்

2056 / வைகாசி

மாத இதழ்



வெளியீடு:
மன்னையின் மைந்தர்கள் அமைப்பு.

மண்ணின் மாற்றத்தை நோக்கி

மாற்றங்களை பிறரிடம் எதிர்பார்க்காமல் எம்மிடம் இருந்து ஆரம்பிக்க வேண்டும் என எண்ணிய பல எளிய மக்கள் ஒன்று சேர்ந்து டிசம்பர் 26, 2014ம் தேதி முகநூலில் மன்னையின் மைந்தர்கள் அமைப்பை ஆரம்பித்து இன்று 4966 முகநூல் நட்புகளுடன் தொடர்ந்து பயணிக்கிறது.

இணையத்தில் மட்டும் இல்லாது களத்திலும் பல செயல்களை வெற்றிகரமாக செய்து வருவது குறிப்பிடத்தக்கது.

குறிப்பாக நம்மாழ்வார் ஏரியை தூர்வாரி மீட்டெடுத்தனர், நம்மாழ்வார் பூங்கா, மீத்தேன் திட்ட எதிர்ப்பு போராட்டங்கள், உயர்திரு. சகாயம் (இ.ஆ.ப.) அவர்களை கொண்டு நமது வாக்கு! நமது உரிமை!! தேர்தல் கருத்தரங்கம், கருவேல மரம் அழிப்பு (மன்னார்குடி தொடர்வண்டி நிலையம் அருகில்), நெகிழி அழிப்பிற்கான விழிப்புணர், இரத்த தான முகாம், கடலூர் வெள்ள நிவாரண உதவி, பூமியை காப்போம் கருத்தரங்கம் என பல உறுப்பினர்களின் ஒத்துழைப்புடன் சிறப்பாக நடைபெற்றது. மேலும் அரிச்சபுரம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியின் அடிப்படையை சரிசெய்து கொடுத்துள்ளார்கள்.

நோக்கம்:
மக்களின் வாழ்வியலை மேம்படுத்துவதையும், இயற்கையை பேணி காப்பதையும் முதன்மையாக கொண்டு அதற்கு தேவையான விழிப்புணர்வை நாங்களும் பெற்று அதனை மக்களுக்கும் கொண்டு செல்வதே இவ்வியக்கத்தின் நோக்கம்.

எங்களுடன் இணைந்து செயல்பட விரும்புபவர்கள் தொடர்பு கொள்ள...
பகிரி: +91 8220567322

இணையம்:
https://maintharkal.mannai.in/

# தஞ்சையில் ஒரு மனித நேய மருத்துவர்!



இங்கு எல்லாமும் வணிக மயமான பின், அதிலும் மருத்துவ துறை சிறப்பு சிகிச்சைகள் பெரும்பாலும் வணிகமயமான சூழலில், MS. M. Ch (Gastroenterologist) படிப்பை படித்துவிட்டு தஞ்சாவூர் யாகப்பா நகரில் Dr. முரளி Gastro Clinic நடத்தி வரும் மருத்துவர் ஆர்.முரளி, ஒரு மனித நேய மருத்துவராக மக்கள் மத்தியில் போற்றப்படுகிறார் என்பது ஆச்சரியம் மிகுந்த உண்மை.

மஞ்சக்காமாலை மற்றும் குடல் நோய் சிறப்பு மருத்துவரான இவர் மருத்துவத்திற்கான கட்டணத்தை வாங்குவதில்லை. மனிதர்களை நேசித்து, உண்மையாக பரிசோதித்து பிரச்சனைகளை கண்டறிந்து, உளவியல் ரீதியாகவும், மருத்துவ ரீதியாகவும் ஏழை, எளிய மக்கள் முதல் எல்லோருக்கும் இலவச மருத்துவ சிகிச்சை அளிப்பது இவரின் சிறப்பு.

அறிதினும், அறிதான இவரின் சேவை பற்றி பல்வேறு இதழ்கள் பாராட்டியுள்ளன. இலவச மருத்துவ சேவை பார்ப்பதால் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டாலும் நோயாளிகளின் மனநிறைவிற்கு ஈடு இணையில்லை என்கிறார் இந்த மனித நேய மருத்துவர்.

இவர் ஆரம்பத்தில் மன்னார்குடியில் சில ஆண்டுகள் பணி புரிந்து மிகவும் பெயர் பெற்றவர். இவர் தந்தை மின்சார வாரியத்தில் பணி புரிந்தவர். சமூக கண்ணோட்டத்தில் வளர்ந்த இவர் மனித நேயம், மானுடம், இவற்றை மையமாக கொண்டு இந்த மருத்துவ இறை சேவையை செய்கிறார்.

இவரின் பேச்சு, உளவியல் ரீதியான அணுகுமுறை, அறிவியல் ரீதியான பரிசோதனைகள் அடிப்படையில் மருத்துவம் தஞ்சை மற்றும் அதனை ஒட்டியுள்ள மாவட்ட மக்களுக்கு வரப்பிரசாதம்.

இவரது மருத்துவமனையில் நுழைந்ததும் தினமும் ஒரு திருக்குறள் அதன் விளக்கம், மருத்துவரை பார்க்கும் நேரம் வரை படிக்க ஏராளமான புத்தகங்கள், மருத்துவரை பார்த்ததும், அவரின் நீண்ட நேர உளவியல் ரீதியான உரையாடல், அதற்கு பிறகு மருத்துவரின் ஆலோசனை இவ்வளவும் முடித்து நிறைவாய் வெளியே வந்து மருத்துவர் கட்டணம் எவ்வளவு? என்று கேட்டால், செவிலியர் சொல்கிறார் "மருத்துவர் கட்டணம் எதுவும் இல்லை, நீங்கள் விரும்பினால் அவர் நடத்தும் அறக்கட்டளைக்கு உங்களால் இயன்ற தொகையை இந்த உண்டியலில் போடலாம்". அந்த தொகை ஏழை நோயாளியின் மருத்துவ செலவுக்கு உதவும்" என்று.

இதை கேட்டதும் நாங்கள் ஒட்டு மொத்தமாய் அதிர்ந்து போகிறோம். இந்த காலத்தில், இவ்வளவு படித்த சிறப்பு மருத்துவர் இப்படி செயல்பட முடியுமா? என்று நம்ப முடியவில்லை.

ஆனால் அதுதான் உண்மை என்பதை உணர்ந்து உண்டியலில் நம்மால் இயன்ற தொகையை போட்டுவிட்டு வெளியே வரும் போது மனசு சொல்கிறது, இன்னும் இவரை போன்ற மருத்துவர்கள் இருப்பதால் தான் இங்கே மானுடம் இன்னும் வாழ்கிறது.

வாழிய மருத்துவரின் சேவை, வாழிய அவரது குடும்பம்.

—



முனைவர். சா சம்பத்,
தேசிய பயிற்சியாளர்,
மன்னார்குடி.

---

# மறவம் காப்போம்!

பா வகை : *இன்னிசைப் பஃறொடை வெண்பா*

மறவமே நெஞ்சினில் மாண்பெனக் கொள்வாய்
சிறந்திட நாளுமே சிந்தையில் வெல்வாய்
பறவையைப் போன்றுமே பாரினைக் காண்பாய்
உறவினைக் காக்கும் உணர்வினைக் கொள்வாய்
மறந்திடா மாந்தம் மனத்தினை வெல்லும்
இறந்திடா மாந்தம் இன்பமே கொள்ளும்
அறத்தினில் வாழ்க்கையும் அன்பினால் ஓங்குமே
மண்ணில் நிலையென மாண்புமே சொல்லுமே
விண்ணுமே போற்றும் வியப்பாய் மறவமே
உண்மை உலகின் உயர்வே ஆகுமே
வன்மை யகற்றும் வலிமையைக் கொண்டிடு
நன்மையே வென்றிடும் நாளும்!

—

வாழ்வியல் கவி,
(சா. நாகூர் பிச்சை)
துபாய்.



# பேரம் பேசி வாங்குகிறார்கள்

வாடி விடுகிறது
கீரை

தினமும் சூரியன்
அழித்து அழித்து வரைகிறது
நிழலோவியம்

மூளும் சண்டை
போர்க்களம் ஆகிறது
கழுவும் பாத்திரம்

மகளுக்காக
தாய் கற்கிறாள்
சைகை மொழியை

புதரில் சிக்கிய மீன்கள்
நீந்துகின்றன
நீரில் பிம்பம்

வட்டத்திற்குள்
சுற்றிச்சுற்றி பசியாற்றுகிறது
நிலாச்சோறு

சிறிது நேரம்
உறங்கிக் கொள்கிறேன்
போட்டித் தேர்வுகள்

கடலுக்குள் சென்றவர்
வீடு திரும்பவில்லை
துடிக்கிறது கரையில் மீன்

உள்ளூர்வாசிதான்
வழிச் சொல்லத் தெரியவில்லை
நூலகத்திற்கு



தலைகளை சீவ சீவ
கூடிவிடுகிறது கூட்டம்
இளநீர் வியாபாரம்

வாசிக்கிறது குழந்தை
அகம் மகிழ்கிறார் இரண்டாம் தாய்
ஆசிரியர்

பேரதிர்ச்சியான செய்தி
ஒன்றும் செய்துவிடவில்லை
குழந்தையை...

- பெ. விஜயலட்சுமி,
காஞ்சிபுரம்,
கைப்பேசி: 6380704001



மா. நிரல்யா, இரண்டாம் வகுப்பு, சிங்கப்பூர்.

# நடித்தவள் மறந்து விட்டாள்

பார்த்தவர்கள்
புணரத்துடிக்கிறார்கள்
நீலப்பட நடிகையை.

அசையும் செவிக்கும்
நகரும் கால்களுக்கும்
அளக்கத் தெரிவதில்லை
வனப் பரப்பின் நீளும்
வலசைப்பாதையின்
தேடுதல் பயணம்.

நீளும் பற்களை
அறுத்தெடுப்பதற்காக
அலையும் மக்களே
நீரின்றி அலையும் போதாவது
உணரப்பாருங்கள்
காட்டின் பரப்பை
கடைசிவரை காப்பாற்றும்
யானையின் நினைவுத் திறனை.

தும்பிக்கையை
உயர்த்தும் போதுதான்
காட்டைத் தேடும்
ஆசை வருமோ
கோயில் யானைக்கு.

நெடுநேரமாக
யாருமற்ற தனிமையில்
மரம் விட்டு மரம்
தாவித் தாவி விளையாடும்
பறவையின் இறக்கையில்
காற்றை நிரப்பியனுப்புகிறது
ஊஞ்சலாடும் கிளையில்
ஒட்டிக்கிடக்கும் இலைகள்

வழக்கமென வாசத்தை
நுகரவைத்த
மல்லிகையைத் தாண்டி
இறுக அணைத்துக் கிடந்த
சாளரத்தைத் திறந்தபடி
தனிமையில் நிற்கிறேன்
பேரன்பைச் சுமந்தபடி
உறங்கும் உன்னைக் கலைக்காது
ஓரடி எட்ட நிற்கவைத்த
நேற்றின் மனக்கசப்பு
என்னையே ஆட்டிவைக்க
எட்டிப்பார்க்கும் ஆதிக்க வெறியை
அணைத்துக் கொள்ள
தேடிவரும் உந்தன் சுவாசத்தில்
என்னை நான்
இளைப்பாற்றிக் கொள்கிறேன்
அறைக்குள் பரவுகிறது
பருவ மழைக்குச் செழித்த
பசுமையெனும் வனத்தின் வாசம்.

—

இளையவன் சிவா,
கைபேசி: 9965359130



# காற்றும் காலமும்...

என் இதயம் முழுக்க
நிரம்பி வழியும் நினைவுகளில்
உல்லாச பயணக்காரி நீ...!
/

என்னை ஏற்றுக்கொள்
உன்னில் நிச்சயம் சுடர்விடும்
காதல் விளக்கு...!
/

உன்னை
பத்திரப்படுத்திக் கொண்டேன்
எனக்குள்
சுகமாக இருக்கிறாய்.
நான் தான்
நூலாய் இளைத்திருக்கிறேன்.
/

எனக்கு முன்பு
பலர் வந்திருக்கலாம்
எனக்கு பின்பு பலர் வரலாம்.
என் அன்பை ஏற்றுக் கொண்ட
உன் இதயத்தில்
நானும் என் காதலும்.
/

இவ்வரிசையில்
நானில்லையென
ஒருவராலும் சொல்ல
முடியாதது
மரணத்தின் வரிசை.
/

எனது கற்பனைப் பறவை
அவள் கொடுத்த
றெக்கைப் படிமங்களால்
கவிதைகளாய்ப் பறக்கிறது
வானத்தில்...!
/

எத்தனை
உயிரை வாழ வைத்தோம்,
மாய்த்தோமென; எதையும்
கணக்கு வைப்பதில்லை
காற்றும் காலமும்.
/

கவிதையில் சறுக்கி
விழுந்தவன் உடல் முழுதும்
கற்பனையின் ரணங்கள்.
/

எத்தனை துளிகள்
விழுந்தாலும்
அத்தனை துளிகளையும்
மறுப்பின்றி ஏற்கிறது.
/

என்மீது வண்டி வண்டியாய்
நீங்கள் கொட்டியதெல்லாம்
பாசமிகு நேசம் என்பதால்
சேதாரமில்லாத
அன்பின் ரணங்கள் எனக்கு.

—



பாரியன்பன் நாகராஜன்,
82/32 -B, பிள்ளையார் கோவில் தெரு,
காமாட்சி அம்மன் பேட்டை,
குடியாத்தம் - 632602
கைப்பேசி: 9443139353

# அவைகள் மட்டுமா?

கல்வி
செல்வம்
பதவி
மதிப்பு
மரியாதை
செல்வாக்கு
இவற்றில் மட்டுமா
மற்றவராகளோடு
தான் கடினமுயற்சியால்
பெறுவதை
அவருக்கு எளிதாக
கிடைக்கிறது

என் வெற்றிக்கான
பாராட்டை விட
அதே வெற்றிக்கு
இவருக்கு அதிகம் கிடைக்கிறது

என் சிறு சறுக்கலுக்கும் கூட
கேலியும் வசைமொழியும்
அதனால் விளையும்
அவமானமும் அதிகம்

மற்றவர் எனில்
அது கண்டு கொள்ளப்படுவதே இல்லை

என்ன அது
மனித மனங்களில்
ஒப்பீடு

## உன்னில் என்னை கண்டேன்

விருப்பத்துக்கு
நம்பிக்கையாய்

செயலில்
பிரதிநிதியாய்

உழைப்பில்
கவனக்குவிப்பாய்

சறுக்கலில்
காரண ஆராய்ச்சியாய்

வெற்றியில்
அடுத்த நகர்வாய்

அங்கீகாரத்தில்
ஆர்பாட்டமின்மையாய்

உன்னிடத்தில் என்னை
கண்டேன்

மனதின் பாராட்டு
புத்திக்கு

## அத்தனை பேர் இருந்தாலும்...

விருப்ப உணவு
செவிக்கு இனிய பாடல்
காணொலியாய் நகைச்சுவை
உடலை குளிரச்செய்யும்
பருவ நிலை

நம்பிக்கைகொடுக்கும்
பேச்சாளர்களின் உரை

ஆசைப்படுகின்ற

மகிழ்வுந்தில்
நெடும் பயணம்
என அத்தனையும்
உபயோகப்படாது
மனது
அதுவா இதுவா
ஒற்றையா
இரட்டையாவையில்
இருக்கையில்

நேற்றைய
தோல்வி பற்றிய
நினைப்பில்

நாளைய பற்றிய
பதற்றத்தில்
கவலையில்

## அவ்வளவும் தெரிந்தும்

இணைந்து
பணி புரிந்து
கால நேரம் பார்க்கா
முழுமையாய்
ஈடுபாடு கொடுத்து
பணியின் அவசர அவசியம் புரிந்து
தவறுகள் செய்யாமால்
இருப்பது தெரிந்தும்

தனக்குள்
நெருடிக்கடியால்
சங்கடத்தால்
அவமானத்தால்

வீசப்படும்
வசை மொழியையும்

அடுக்குஅடுக்காய்
சொல்லப்படும்
குற்றச்சாட்டுகளில்
உண்மை இல்லை இருந்தும்

வாய்மூடி
மௌனியாகி
உள்ளுக்குள்ளேயே
சங்கடப்பட்ட மனதோடு

தவிர்க்க இயலாதவையாய்
காரணங்களாய்
தன்னிலும்
வலு உள்ளவராய்
அதிகாரம் உள்ளவராயும்
இருப்பதாலும்
பொருளாதார காரணிகளாலும்...

## நமக்குள்ளே...

செயலும்
பேச்சுமற்ற
பொழுதுகளில்

நமக்கு
பிடிக்காதவர்
பிறரிடம்
நம்மை பற்றி
என்னவெல்லாம்
சொல்கிறரோ

அவர் பேச்சும்
நடத்தையும்
சுத்தமாய் பிடிக்கவில்லை

செல்வமும்

செல்வாக்கும்
இப்படி நடந்து
கொள்ள வைக்கிறது

அவரின்
சரியான
நடவடிக்கைக்கும்
வெறுப்பான மனநிலையால்
எல்லாம் தப்பு

என்று யோசிப்பது
யார்
மனித மனம் தான்

உண்மை வேறு விதமாய்
இருப்பினும்

கூடுதலாய்
அதனால்
எந்த உபயோகமில்லை எனினும்
நமக்கு தான்
மன அழுத்தம்
என்று தெரிந்த போதிலும்

## உங்களைப்பற்றி...

தன்னுடையதோ
தனக்கானவர்களுக்கான
மகிழ்ச்சியில்
மலர்வதும்

நம்முடையதோ
நமக்கானவர்களுக்கான
சோகத்தில்
நீர் வடிவதும்

ஆச்சார்யபடுகையில்
விரிவதும்

வசை மொழி
வாசிக்கப்படுகையில்
சுருங்குவதும்

மனிதத்தன்மை
செயல் காண்கையில்
உள்ளத்துக்கு
உவகை
கொடுப்பதும்

விரும்பதகாதவை
பேசப்படுகையில்
வேறு பக்கம்
திருப்பிக்கொள்வதும்

## யார்?

கண்கள் தான்
அதன் பணி
பார்த்தல் மட்டுமில்லை

## எப்பவுமே..

யோசிப்பில் தெளிவு
கிடைக்கா குழபபமும்

எதிர்பார்ப்புக்கு
அறிவிக்கப்படா முடிவும்

நாளைய நிகழ்வுக்கு
இன்றைய பதற்றமும்

பேசுபவர் மௌனத்தின்

காரணம் தெரியாமையும்

பேசாதவர் பேசவதற்கு
விடை தெரியாமையும்

உறக்க இரவுகளை
களபாடுபவை தான்

## இன்பம்

வேண்டுவன
கிடைக்கையில்

விரும்பாதது
நடக்காமையில்

முடிவு
சாதகமாகையில்

எதிர்பார்ப்பு
நம்பிக்கை கொடுக்கையில்

வெற்றி
தொடர்கதையாகுகையில்

தோல்வி
விலகுகையில்
மனதுக்குள்
இன்பம்

## மறுபடியும்...

தனித்த பொழுதுகளில்
படைப்புகளுக்கான
முயற்சியில்

யோசித்ததில்
கண்டதில்
செவிகொடுத்ததில்
கருப்பொருள் தேடல்
கிடைத்த பின்
வார்த்தைகள் தேடல்

ஆரம்பித்த பிறகு
நொண்டியத்தால்
இது வரை யோசித்த
வார்த்தைகளிலிருந்து
மற்றொரு படைப்பு

இப்படியே
மறுபடியும்
மறுபடியுமான
முயற்சி
சுழற்சியாய்

## கழித்தலுக்கும் கூட்டலுக்கும் பின்....

செயல் தோல்வியின்
சுய பரிசோதனையில்
நான் எப்போதும்
சரி தான்
என்ற யோசிப்புகள் இல்லா
முன் தீர்மானங்களை
கழித்தும்...

விமர்சனம் செய்பவர் பற்றி
முன் அபிப்பிராயமின்றி
சொல்லப்படுபவை
மட்டும் திறந்த மனதுடன்
கூட்டிக்கொண்டால்
அப்புறம் என்ன?

அடுத்தது வெற்றி தான்...

## காலங்கள் தந்த காயங்கள்

படிப்பு முடித்து
செய்பணிக்கான
நீண்ட காத்திருப்பு

உழைப்பை கொடுத்த
பின்னும் பணியில்
நிறைய ஆண்டுகள்
கழித்த பின்னான
அங்கீகாரம்

எதிர்பார்ப்பு
ஏமாற்றமானதும்

மீண்டும் மீண்டுமான
முயற்சிக்குப்பின்னும்
தொடர் தோல்விகள்

காலங்கள் தந்த காயங்களாய்
என்றும் மறவாத
நினைவலைகளாய்
வாழ்வில் நிலைபெற்றபின்

## எல்லோமே நீங்கன்னா...

நான் தான்
இதை செய்ய சொன்னேன்

எப்படி செய்யனும்
விளக்கினேன்

முடிக்க வேண்டிய
அவசியம் சொன்னேன்

சொன்னதை
செய்தாய்

செய்ததால் தான்
பணி முடிந்தது

இந்த வெற்றிக்கு
காரணமே நான்

என்று நீண்டதாய்
அடுக்கிக்கொண்டே
போனால்

முடிக்க வேண்டும்
என்று உறுதி எடுத்த

காலக்கெடு வைத்து
திட்டமிட்ட

செயலுக்கு தேவையான
திறமை வளர்த்த

பயணத்தில் வந்த
சவால்களை
எதிர் கொண்ட

செயலுக்கு
கொடுத்த கடும் உழைப்பை

என இத்தனை
செய்ததால் கிடைத்த
வெற்றியில்
எனக்கு பங்கு கிடையாதா?

# ஆதலினால்...

தவறான
முடிவுகளும்

செயல்
தோல்விகளும்

அவமானங்களும்
ஏளனங்களும்

இழப்பில் ஆன
சோகங்களும்

அடுத்து என்ன ஆகுமோ
பய பதற்றங்களும்

அடுத்தது
தொடர்ச்சியாய்
வராதீர்கள்

காரணங்களாய்
சரியாய் விடும்

சறுக்கல்கள்
எல்லோருக்கும் தான்

நம்பிக்கை
இழக்கக்கூடாது

ஒரு கஷ்டத்திற்குப்பின்
நல்லது நடக்கும்

வாழ்க்கை இப்படியே
போய் விடாது

என்று சொல்லப்படும்
ஆறுதல் வார்த்தைகள்

அர்த்தப்பட
வேண்டும் என்பதால்



—

*A.S. சுந்தரராஜன்,*
மானாமதுரை.




ஓவியம்:
**S. நிகிதா**
5ஆம் வகுப்பு,
ஸ்ரீ பாரதி வித்யாலயா பள்ளி,
மன்னார்குடி.

# நீ
# நாளை வா

என்றான் லோபி
நீ
காலத்தை
வென்று விட்டாய்
என்றான் ஞானி.

சில
வாய்கள் அகில் போல்
மணக்கிறது அனால்
வார்த்தை மட்டும்
காவாயாய் நாறுகிறது.

முயலையும் + ஆமையையும்
ஒன்று குழைத்துச் செய்த
குணத்திலே தங்கிவிடுகிறது
இங்கு பலரது வாழ்க்கை.

நீண்ட தொல்
நினைவுகளில்
நிம்மதி காண்கிறேன்
மாண்டு போன மழலையினை.

உன்னைக் கடந்து
செல்லவே நினைக்கிறேன்
தொடர்ந்து வருகிறது நிழல்.

—

கோ. தனுசன்.
மட்டக்களப்பு,
இலங்கை.




ஓவியம்:
**S. ஹரிதா**
5ஆம் வகுப்பு,
ஸ்ரீ பாரதி வித்யாலயா பள்ளி,
மன்னார்குடி.

# எப்படி தடுப்பது..?

வாரியத்தில் தொடரும்...
மின் விபத்துக்களை..!?

பாதுகாப்பு வகுப்பு
எடுத்தாச்சு.....!

பாதுகாப்பு சாதனங்கள்
கொடுத்தாச்சு....!

சென்சார் கருவி
வழங்கியாச்சு...!

பாதுகாப்பு செயலி
வந்தாச்சு....!

பாதுகாப்பு உறுதிமொழி
எடுத்தாச்சு......!

நிறைய விபத்தை
பார்த்தாச்சு.....!

வாரிய நடவடிக்கை
எடுத்தாச்சு...!

குங்குமம் இழந்த
மனைவியையும்...?

தந்தையை இழந்த...
பிள்ளைகளையும்...?
வீதியில் பார்த்தாச்சு....!

ஆனாலும் -
இன்னும் உணரவில்லை -
பாதுகாப்பின் அவசியத்தை...!

குருவிகளைப் போல்..
கரண்டில் அடிபட்டு
தொடர்ந்து சாகிறோம்...!

எல்லோரையும்
கண்ணீரில் மிதக்க விட்டு...!?

இனி -
எப்படி தடுப்பது..?

வாரியத்தில் தொடரும்...
மின் விபத்துக்களை..!?

—

முனைவர். சா சம்பத்,
தேசிய பயிற்சியாளர்,
மன்னார்குடி.



# உடை நேர்த்தி ஒரு கம்பீரம்

வீட்டுப் பக்கத்தில் இருக்கும் தையல் கடை அன்று அழுத்தமாய் கண்ணில் படக் காரணம்... அந்த தையல் கலைஞரின் தோற்றம்.

மிடுக்காக கனகச்சிதமாக முழுக்கை சட்டையும்.. அதற்கு பொருத்தமாக பேண்ட்டும்... நடுவே வயிற்றில் ஏறி இருந்த பெல்ட்டும்.. தக் செய்த ஆடை அளவும்... பார்க்கவே ஆகா என்றிருந்தது. இதற்கும்... அவருக்கு வீடு கடையை ஒட்டி பின்னால்தான். ஆனாலும் அவரின் உடை நேர்த்தி வியக்கச் செய்தது. ஒரு மிடுக்கான தோற்றம்.

வழக்கமாக இந்த மாதிரி சின்னக் கடைகளில்... அதுவும் வீட்டை ஒட்டியே கடை போட்டிருக்கும் எந்தக் கடையிலும்... இந்த மாதிரி தோற்றத்தை பார்க்க முடியாது. தலையைக் கூட வாராமல் கடையைத் திறந்து வைத்து... நேற்று வைத்த மிச்சம் போலவே அமர்ந்திருக்கும் பல கடைக்காரர்களைப் பார்த்திருக்கிறோம். அதற்கு நேர் மாறாக இவரின் பளிச் தோற்றம் வசீகரிக்கவே செய்தது. இந்த உடை நேர்த்தி வாழ்வில் எல்லாத் தருணங்களிலும் தேவை என்றே நம்புகிறேன். அது ஒரு கம்பீரம். என்ன வேலை செய்கிறோம் என்பது முக்கியமே இல்லை. எப்படி செய்கிறோம் என்பதுதான். அப்படி... பழைய ஆடையாகவே இருக்கட்டும். ஆனால் அதை பதமாய் அணியப் பழகுதல் அவசியம்..

இதுதான் வேலை என்றான பின் உடையிலும் உள்ளத்திலும் சுத்தம் இருந்தால் நலமே.

கறிக்கடைதானே என ஒரே டி சர்ட்டை போட்டிருக்கும் ஆளைப் பார்க்கிறேன். மிதிவண்டி சரிசெய்யும் நிலையம் தானே என ஒரே சட்டையை போட்டிருக்கும் ஆட்களை பார்க்கிறேன். தேநீர் கடையிலும் அதே நிலைமை தான்.

இவையெல்லாம் பொருளாதாரம் சார்ந்து என்று சொன்னால் அதை ஒப்புக்கொள்ள முடியாது. 100 ரூபாய்க்கு டி ஷர்ட் கிடைக்கிறது. காரணம் அழுக்காகிற வேலைதானே என்ற எண்ணம். எதில்தான் அழுக்கு இல்லை. இன்னமும் சொல்லப்போனால் அழுக்கு ஆவதற்குதான் ஆடையே. துவைத்தால் போக போகிறது. அதுக்கு போய்... ஒரே துணியை வாரக்கணக்கில் போட்டுக்கொண்டு இருப்பது.. ஒவ்வாமை. அதுவும் தேநீர் கடை... பால் கடை... மிதிவண்டி கடை... காய் கடை... கறிக்கடை என தினமும் புழங்கும் இடங்களில் இந்த மாதிரி ஒரே ஆடை எந்தக் காரணங்களுக்குள்ளும் அடங்காது. டீ மாஸ்டர் தான் அப்படி என்றால்.. ஓனரும் அப்படியே வாரக்கணக்கில் அதே உடையில் இருப்பது ஒவ்வாமைக்கு றெக்கை முளைத்த மாதிரி.

கடை முதலாளிகள்... இதில் கவனம் கொள்ள வேண்டும். கடையின் பொருட்கள் பிறகு. விற்கும் ஆட்களே முதன்மை. அவர்களின் சுத்தம் அவர்களுக்கு சோறு போடுமா தெரியாது. வாடிக்கையாளர்களுக்கு ஆறுதல் தரும். (கல்லாவில் அமர்ந்திருக்கும் ஓனர்கள்.. ராக்கெட் விட்டவர்கள் மாதிரியே அமர்ந்திருப்பது இன்னும் சோகம்.)

அதே போல வீட்டுப் பெண்களை பார்க்கிறேன். அவர்களும் அப்படிதான். மற்றவர் வீட்டு கல்யாணத்துக்கு மணிக்கணக்காக உடை உடுத்தி.. மாய்மாலம்... இதழ் ஜாலம் எல்லாம் பூசி... மினுக்கிக் கொண்டு போகிறவர்கள்.. வீட்டில் இருக்கும் போது... ஐயயோ காண சகியாது. ஒரு பழைய.. சாயம் போன இரவு ஆடையை போட்டுக் கொண்டு கடைகளுக்கு செல்வதும்... தள்ளுவண்டிக்காரனிடம் பேரம் பேசுவதும்...வீதிகளில் நின்று சக மகாதேவிகளோடு வட்ட மாநாடு போடுவதும்.. அழுக்கு நிறைந்த சூறைக் காட்சிகள்.

அதான் அத்தனை புடவை வைத்திருக்கிறார்களே. மற்றவர் வீட்டு திருமணத்துக்கும் தனக்கு புதுப் புடவை வாங்கும் புண்ணியவாதிகள்.. அதில் ஒவ்வொன்றாக ஒரு மூன்று நாட்களுக்கு ஒரு முறையாவது உடுத்தலாம்தானே. என்னத்த சொல்றது. இல்லங்கறவங்களுக்கு அது இல்லை என்பதிலேயே அடங்கி விடுகிறது. வைத்துக் கொண்டே துவைக்க சோம்பேறித்தனம் கொண்டு வியாக்கியானம் பேசுவதெல்லாம் வாழ்க்கைக்கு அழகல்ல. வார நாட்களுக்கும் அழகல்ல.

வழக்கமாக போகும் மளிகைக் கடைதான். ரொம்ப நாட்களாக பார்க்கிறேன். அந்தக் கடைக்கு முதலாளியே அவன்தான். ஆனாலும் அதே ரோசு நிற சட்டைதான் தினமும். எப்போதாவது அது பச்சை நிறமாக மாறி இருக்கும். அப்படி மாறினால் அது ஒரு ஒரு மாசத்துக்கு தொடரும். தினமும் வேண்டாம். மூன்று நாட்களுக்கு ஒரு முறை சட்டையை மாற்றினால் என்ன குறைந்து போகும். அப்படி இந்த பூமிக்கு சேவை செய்து எந்த சொர்க்கத்துக்கு போகப் போகிறான்.

திருப்பத்தூரில் ஒரு உணவகத்தில் பார்த்தோம். ஒரு வயதான உணவு பரிமாறும் நபர். வெள்ளை வேட்டியில் பட்டை போட்டுகொண்டு பளபளவென ஜொலித்துக் கொண்டிருந்தார். நான் அவரைப் பார்த்துக் கொண்டே இருந்தேன். அவர் இதழில் எப்போதும் அருநகை மிதந்து கொண்டே இருந்தது. இன்னும் ரெண்டு இட்லி சாப்பிட தோன்றியது. அதே போல ஈரோட்டில் ஒரு கடையில்... இலையில் இருக்கும் இட்லியை அப்படியே விட்டு விட்டு காசு கொடுத்து விட்டு ஓடி வந்தோம். அப்படி இருந்தது... உணவு பரிமாறுபவரின் ஆடையும்.. வாடையும்.

தெரியாமலா சொன்னார்கள். ஆள் பாதி ஆடை பாதி.

மனிதனை மனிதன் மதிக்க கற்றுக் கொண்டதே ஆடை உடலில் அமர்ந்த பிறகுதான். அதற்கு முன் பயம் இருந்திருக்கலாம். மதிப்பு இருந்திருக்காது. யாருக்கு என்ன வகை ஆடை சரியாக இருக்குமோ அவர் அதை தேர்ந்தெடுக்க கற்றுக்கொள்ள வேண்டும். வெள்ளுடை போட்டு விட்டாலே... இறைவனுக்கு அருகே நின்று விடலாம் என்று நினைக்கும் பரிதாபங்களையும் பார்க்கிறோம். கருப்பாடை அணிந்து விட்டு கல்யாணத்துக்கு வந்திருக்கியே என்று சொல்லும் அறியாமைகளையும் பார்க்கிறோம்.

அட சீருடை ஆனாலும்.. அதையும் துவைத்து கமகமக்க உடுத்தலாம்தானே. பல ஓட்டுனர்களைப் பார்க்கிறேன். ம்ம்... அதே கசகசப்பு தான். மாலையில் கசங்கி இருந்தால் பரவாயில்லை. காலையில் வண்டி ஏறும் போதே கசங்கி இருந்தால்... என்ன சொல்வது. உள்ளம் கசங்கி இருந்தால் உடையில் கவனம் இருக்காது. சரிதானே.

"உடைகளின் நேர்த்தியினால் இந்த உலகினை வென்றவள் நீ" என்றொரு பாட்டு வரி எப்போதும் என் நினைவில் நிற்கும். சிறுவயது முதலே.. ஆடைகளின் மீது அபார நம்பிக்கை கொண்டவன் நான். இருக்கின்ற சட்டையையே இடத்திற்கு தகுந்தாற் போல மாற்றி விடும் கற்பனை வல்லமை எப்படியோ நமக்குள் புகுந்திருக்கிறது. அது இன்று வரை நம்மை காக்க தவறியதே இல்லை.

உடை நேர்த்தி ஒரு கம்பீரம்.

—

கவிஜி

---

# தினசரி

எப்போதும் போல்
பாலியல் சீண்டல்
நெடுஞ்சாலை விபத்து
தர்ணா போராட்டம்
எல்லையில் பதற்றம்
செயின் பறிப்பு
மீனவர்கள் சிறைப்பிடிப்பு
நாய்க்கடி போன்ற
செய்தி தலைப்புகளின் பின்
பதுங்கிக் கொண்டது
சாமானியனின் அமைதி

—

பா. சிவகுமார்

# சர்வதேச குறுங்கவிதை கவிதை தினம் ஏப்ரல் 17ம் நாள்.

குறுங்கவிதை ஒரு தாலாட்டு
குறுங்கவிதை தாகம் தீர்க்கும் தண்ணீர்

குறுங்கவிதை குறுஞ்செய்தி
குறுங்கவிதை கொட்டும் மழை

குறுங்கவிதை சிறு கிளிஞ்சல்
குறுங்கவிதை பெருங்கடல் மௌனம்

குறுங்கவிதை
தேன் போல தித்திக்கும்
திருமருந்தாகிப் பிணி தீர்க்கும்

குறுங்கவிதை
அந்திநேரத்து மஞ்சள் வெளி
அந்தகாரத்தை எதிர்க்கும் ஒளி

குறுங்கவிதை
கரங்களுக்குள் அடங்கும் மூவரி
ஆகாயம் எட்டும் பெருஞ்சவாரி

குறுங்கவிதை கவிதை ரொம்ப சுருக்கம்
வாசிக்க வாசிக்க விழிவிரிய வைக்கும்

குறுங்கவிதை
வாசகரைக் கைதட்ட வைக்கும்
இதயங்கள் அதை மெய்மறந்து
சுவைக்கும்

வாருங்கள் வாழ்த்துவோம்
குறுங்கவிதைவை
வாருங்கள் கொண்டாடுவோம்
உலக குறுங்கவிதை நாளை.

கொண்டாடுவோம் கைக்குள் அடங்கும்
பிரபஞ்சக்கவிதையாம் குறுங்கவிதைவை.

இன்று உலகளாவிய ரீதியில் பிரபலமாகி
வரும் கவிதை வடிவமே குறுங்கவிதை
கவிதை.

குறுங்கவிதை கவிதை மிகவும்
எளிமையான கவிதை வடிவமாகும்.

சுருங்கச் சொல்லும்
வியக்க வைக்கும்

எழுதுவது இனிய உணர்வு தரும்
சற்று சிரத்தை எடுத்தால் அழகாய்
எழுதிவிடலாம்

சிந்தனைத் திறனோடு
சிறப்பான வாழ்வியல் தத்துவம்
சிறுவார்த்தைகள் கொண்டு
செவ்வனே சொல்லல் வேண்டும்.

சிற்றுயிர் நேசமும் சிறப்பாய் வடிக்கலாம்
நெகிழும் நெஞ்சை குறுங்கவிதைவில்
அவிழ்க்கலாம்
குறுங்கவிதை எழுதினால்
சிற்றெறும்பையும் நேசிப்பாய்
சேறு சகதியிலும் கவித்துவத்தை
யாசிப்பாய்

உண்மை மட்டுமே நீ உரைப்பாய்
கவித்துவத்தில் கற்பனை எல்லாம்
உரிப்பாய்

வாழ்க குறுங்கவிதை

வளர்ப்போம் குறுங்கவிதை

ஜப்பானிய கவிதை வடிவம்தான் குறுங்கவிதை.

3 வரிகளில் இருக்கும் கவிதைக்குள்,

இயற்கை, காதல், தத்துவம், நேசம், பரிவு, நையாண்டி, அஃறிணை வாசம் என்று அகிலத்தின் சகலதும் அடங்கி இருக்கும்.

வாழ்வியலின் இழிநிலை கண்டு மனதில் பிரவாகித்துக் கிளர்ந்து எழும் உணர்ச்சிகள், ஏக்கங்கள் குறுங்கவிதைவாக வெளிப்பட்டு வழியும் ஒரு குறுங்கவிதைவாளனுக்கு.

குறுங்கவிதை கவிதைகளை சிறியவர் முதல் பெரியோர் வரை எல்லோரும் மிகவும்  எளிதாகப் புரிந்து கொள்ளலாம்.

இதுதான் குறுங்கவிதைவின் சிறப்பம்சமாகும்.

உள்ளக்கிடக்கைகளை
மெல்லக் கடைந்த
வெல்லப் பாகென

தெள்ளத்தெளிவாகக் கொடுக்கும் குறுங்கவிதை கவிதைகளை நாமனைவரும் எழுதப் பழக வேண்டும்.

அதனால் வருமின்பத்தை அனுபவித்தல் வேண்டும்.

ரேங்கா என்ற ஜப்பானிய கவிதை வடிவிலிருந்து உருவாக்கப்பட்டதுதான் குறுங்கவிதை. ரேங்கா என்பது நீண்ட வரிகள் கொண்ட மரபுக் கவிதை வடிவம். அதிலிருந்துதான் குறுங்கவிதைவை உருவாக்கினார்கள்.

ஆரம்ப காலத்தில் ஐக்கூ கவிதை ஒக்கூ (hokku, ஃகொக்கூ) என்றே அழைக்கப்பட்டது. பின்னர் ஐகை என்று திரிந்து ஐக்கூ என்று அழைக்கப்பட்டது. ஐக்கூ என்றால் அணுத்தூசி போன்ற சிறிய கவிதை என்று பொருள் படுவதாக அமைகிறது. இக்கவிதையின் பெயரை ஹொக்கு என்று பாரதியார் தன் கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார்.குறுங்கவிதை கவிதையானது முதன் முதலில் ஜப்பான் நாட்டில் தான் தோன்றியது.

மட்சுவோ பாஷோ (Matsuo Basho) 1644 முதல் 1694 வரையிலான ஆண்டுகளில் ஜப்பானிய எடோ காலப்பகுதியில் வாழ்ந்த மிக பிரபலமான கவிஞர் ஆவார். பின்னர் இவர் மட்சுவோ சுய்மான் முனிபியூசா என்ற பெயராலும் அழைக்கப்பட்டார். அவரது வாழ்நாளில் ரெங்கு அல்லது ஐகை நோ ரெங்கா என்ற பிரபலமான கூட்டு முயற்சி வகைப் பாடல்கள் படைத்ததற்காக பாஷோ அங்கீகாரம் பெற்றார். தற்போது பல நூற்றாண்டுகளுக்குப் பின்னர் பாசோ ஐக்கூ கவிதைகளின் மிகப்பெரிய ஆசான் என அங்கீகரிக்கப்படுகிறார்.

பழைய குளம்
தவளை குதித்தது
தண்ணீரில் பிளக்

பாஷோவின் இந்த கவிதை உடனடியாக உலகப் புகழ்பெற்றதாக வரலாற்று அறிஞர்கள் நம்புகின்றனர். ஏப்ரல் மாதத்தில், எடோவின் கவிஞர்கள் பாஷோவின் குடிசையில் திரண்டு வந்து தவளையை மையமாகக் கொண்ட ஐகை நோ ரெங்கா கவிதைப் போட்டியை நடத்தினர். பாசோவின் தவளைக் கவிதையை உச்சியில் முதல் கவிதையாக வைத்து அத்தொகுப்பைத் தொகுத்தனர் என்று வரலாறு கூறுகிறது.

பின்னர் ஜப்பான் நாட்டில் இருந்து உலகெங்கிலும் குறுங்கவிதை கவிதைகள் ஆனது பிரபலமாக ஆரம்பித்தது. தற்போது இந்த குறுங்கவிதை கவிதையானது கிட்டத்தட்ட எல்லா மொழிகளிலும் வந்துவிட்டது. குறைவான வார்த்தையை பயன்படுத்தி சமூகத்தில் அதிகபட்ச தாக்கத்தை ஏற்படுத்துவதே குறுங்கவிதை கவிஞர்களின் திறமையாகும்.

1916ம் ஆண்டு வங்கக் கவிஞர் இரவீந்திரநாத் தாகூர் அவர்கள் ஜப்பான் சென்றாராம். திரும்பி வந்ததும் குறுங்கவிதைக்கவிதையில் மயங்கி அதைப்பற்றி ஒரு பத்திரிக்கையில் கட்டுரை எழுதினாராம். அதைப் படித்த நமது மகாகவி பாரதியார்

மனதைப் பறிகொடுத்து அதைப் பற்றியே ஆர்வமாய் அதே ஆண்டு அக்டோபர் மாதம்
16ம் தேதி சுதேசமித்திரன் பத்திரிக்கையில் ஒரு கட்டுரை எழுதினாராம். இதுவே தமிழுக்கு குறுங்கவிதை கவிதைகள் வந்த முதல் அறிமுகமாக அறியப்படுகிறது.

எனவே குறுங்கவிதைவைப் பற்றி தமிழர்களுக்கு அறிமுகம் செய்தவர் பாரதியாராகும். சுதேசமித்திரன் இதழில் ஜப்பானியக் கவிதை என்ற தலைப்பில் 16-10-1916 அன்று எழுதிய குறுங்கவிதை குறித்த கட்டுரையில் இரண்டு ஜப்பானிய குறுங்கவிதை கவிதைகளை மொழி பெயர்த்திருந்தார். இதுவே தமிழுக்கு குறுங்கவிதை குறித்தான முதல் அறிமுகத்தைத் தந்தது.

பருவ மழையின் புழையொலி கேட்பீர்
இங்கென் கிழச் செவிகளே

- பூஸோன் யோ ஸாஹோ

தீப்பட்டெரிந்தது
வீழுமலரின்
அமைதி என்னே

- ஹோ கூஷி

மூன்று அடிகள் கொண்ட ஜப்பானிய குறுங்கவிதை ஐந்து, ஏழு, ஐந்து என சீர்களைக் கொண்டு 17 சீர்களில் எழுதப்படும். குறுங்கவிதைவில் பின்பற்ற வேண்டிய மரபுகளாக அவர் முன்வைப்பவை இவை -

குறுங்கவிதைவில் முதல் அடி ஒரு கூறு. ஈற்றடி ஒரு கூறு. குறுங்கவிதைவின்

அழகும் ஆற்றலும் ஈற்றடியில்தான் உள்ளது. ஈற்றடி ஒரு திடீர் வெளிப்பாட்டை, உணர்வு அதிர்ச்சியை ஏற்படுத்தி முழுக் கவிதையையும் வெளிச்சப்படுத்த வேண்டும். குறுங்கவிதைவின் மொழி ஊளைச் சதையற்ற மொழி. தந்தி மொழியைப் போல், அவசியமற்ற இணைப்புச் சொற்களை விட்டு விட வேண்டும் என்று குறுங்கவிதைவிற்கு விளக்கம் தந்தவர் கவிக்கோ அப்துல் ரகுமான் அவர்கள்

என் வீடு எரிந்து போனதால்
நன்றாகப் பார்க்க முடிகிறது
உதிக்கும் நிலாவை.

என்று மசாஹிடே-யின் கவிதையையும்,

இந்த அழகிய கிண்ணத்தில்
பூக்களை அடுக்கி வைப்போம்
அரிசிதான் இல்லையே

என்று பாஷோ-வின் வரிகளையும் தமிழில் தந்த அப்துல் ரகுமான் பின்னர் 1974இல் பால்வீதி என்ற நூலில் குறுங்கவிதை கவிதைகளை எழுதினார். தமிழில் முதல் முதலாக குறுங்கவிதை கவிதைகளைப் படைத்தவர் அப்துல் ரகுமான்.

இரவெல்லாம்
உன் நினைவுகள்
கொசுக்கள்

தமிழில் குறுங்கவிதை எழுதுகிறபோது, ஜப்பானிய குறுங்கவிதைவின் மரபுகளை கறாராகப் பின்பற்றத் தேவையில்லை என்பது கவிக்கோ அப்துல் ரகுமான் அவர்களின் கருத்து.

“ஒரு மொழியின் கவிதை பிற மொழிகளில் மொழிபெயர்க்கப்படுவது வியப்பல்ல. ஆனால் ஒரு மொழியின் கவிதை வடிவம் உலகின் பல மொழிகளிலும் புகழ் பெறுவதென்பது வியப்பானது” என்று குறுங்கவிதை குறித்து கூறுகிறார் அப்துல் ரகுமான்.

இதேபோல, லிமரிக் என்ற கவிதை வகையின் தமிழ் வடிவமாக வந்தது குறும்பா. இதில் ஐந்து வரிகள் இருக்க வேண்டும். முதலாவது, இரண்டாவது, ஐந்தாவது ஆகிய மூன்று வரிகளில் ஒத்த ஓசையுடன் இயைபுத்தொடை இருக்க வேண்டும். அதேபோல மூன்றாவது, நான்காவது வரிகளும் இயைபுடன் முடிய வேண்டும். இயைபுத் தொடை என்றால் வேறொன்றுமில்லை, அடுத்தடுத்து வரும் வரிகளின் கடைசிச் சொற்கள் இயைந்து வருவது. உதாரணமாக, வள்ளுவரும் மாணவராய் ஆனார்.

திருக்குறளில் தேர்வெழுதப் போனார்
முடிவு வெளியாச்சு...
அந்தோ ஃபெயிலாச்சு...
பாவம் அவர் படிக்கவில்லை கோனார்
கவிக்கோ அப்துல் ரகுமான்

இது ஒரு காலத்தில் மிகப் பிரபலமான குறும்பா.

தற்காலக் கல்வி முறையின் என்னும் மிக

ஆழமான பிரச்சினையை மிக
எளிமையான வரிகளில்
வெளிப்படுத்துகிறார் கவிஞர்.லிமரிக்
வடிவத்தை தமிழில் பிரபலப்படுத்தியவர்
ஈரோடு தமிழன்பன் அவர்கள்
என்பதையும் இங்கே நினைவு கூர
வேண்டும்.

குறுங்கவிதை வடிவக் கவிதையை
நகைச்சுவையாக, கேலியாக எழுதினால்
அது சென்ரியூ என்னும் கவிதை
வகையாகும். தமிழில் குறுங்கவிதை,
சென்ரியூ வடிவங்களைப்
பரவலாக்கியதில் ஈரோடு தமிழன்பன்
ஐயாவுக்கு பெரும்பங்கு உண்டு.

மீ. ராசேந்திரன் என்னும் கவிஞர் மீராவும்
லிமரிக் எழுதி புகழ் பெற்றவர்.

யார் சொல்லிக் கொடுத்தவன்
அடி பிள்ளைக்கு
வலி வாத்தியாருக்கு
ஈரோடு தமிழன்பன் அவர்களின்
சென்ரியு கவிதை இது.

மகாகவி பாரதியார்
தமிழுக்குக் கொண்டு வந்த குறுங்கவிதை
ஒரு
நூற்றாண்டு காலத்தைக் கடந்து
இன்றைய கவிஞர்களால் தொடர்ந்தும்
எழுதப்பட்டு வருவது
சிறப்புக்குரியதாகும்.

இதில் சென்ரியு, குக்கூ, பழமொன்றியு,
மோனைக்கூ, எதுகைக்கூ,லிமரைக்கூ
விடுகவிக்கூ,மணிக்கூ, ஹைபுன் என்று
பல வகைகள் காணப்படுகின்றன.

மூன்றே வரிகள் தான்...

சொல்லும் வாழ்க்கையின் தத்துவம்
மிகப்பெரியது.

அப்படிப்பட்ட தாக்கத்தை எல்லோர்
மனதிலும் ஏற்படுத்திய சில குறுங்கவிதை
கவிதைகள் பின்வருமாறு:

வணக்கத்துக்கு உரியது
பறவையின் எச்சம்
வளர்கிறது வனம்
அமுதபாரதி
புகை பிடித்தால் இறப்பாய்
மது குடித்தால் இறப்பாய்
இரண்டும் விற்றால் வாழ்வில் சிறப்பாய் !

ஈரோடு தமிழன்பன்
சிலைக்கு வெளியே போய்வந்த
கடவுள் நிலையாய் நின்றார்
சிலையைக் காணோம்
ஈரோடு தமிழன்பன்
குடியிருப்புகள் இடித்து
எழும் வணிக வளாகங்கள்
உணவுக்கு என்செயும் காகங்கள்

- அமுதபாரதி

குழந்தைகளின் கூச்சல்
குடித்துவிட்டு வீடுவந்த அப்பா
திண்ணையில் மௌனமாய்

- மு. முருகேஷ்

துருப்பிடித்த ஆணி
காற்றிலாடும் அம்மாவின் படம்
மிச்சமிருக்கும் ஊதுபத்தி மணம்

- மு. முருகேஷ்

ஆளுக்கொரு மிட்டாய்
சண்டையில் பகிரப்படுகிறது
அம்மாவின் பங்கு

- ஷர்ஜிலா பர்வின்

தீப்பெட்டி
திறந்தால்
பிஞ்சு விரல்கள்

- ஸ்ரீரசா

கடலில் வலைவீசும் மீனவன்
கரையில் மீன்கொத்தி
முதலாளி

- அவைநாயகன்

மூடிய ஆலைக்குள்
சத்தம் கேட்டது
தொழிலாளர்களின் குமுறல்

- ஜி. மாஜினி

வீசாத வலைக்குள்
சிக்குண்டுத் தவிக்கிறது...
மீனவனின் பசி

- கா.ந. கல்யாணசுந்தரம்

அரிதாரம் கலைத்ததும்
அழத் தொடங்கினான்
நகைச்சுவைக் கலைஞன்

- வதிலைப் பிரபா

பூதங்கள் ஐந்து
வேதங்கள் நான்கு
பேதங்கள் எண்ணிலடங்கா

- வலசை வீரபாண்டியன்

செடி வளர்த்தோம்
கொடி வளர்த்தோம்
மனிதநேயம் ?

- இரா. இரவி

மிகவும் பெரியதாக, கனமான வார்த்தைகள் கொண்டதாக சாமானிய மக்கள் புரிந்து கொள்வதற்கு கடினமான விதமாக இல்லாமலிருக்கும் மிகவும் எளிமையாக எளிதாக விளங்கிக் கொள்ளக் கூடியதாக எழுதப்படும் குறுங்கவிதை கவிதைகளை விரும்பாதவர்கள் இப்போது யாரும் இல்லை.

குறுங்கவிதை என்பது முற்றிய கரும்பு...

அதை விரும்பிச் சுவைப்போம்.
எழுதிப் பரிமாறுவோம்...



—

Dr. ஜலீலா முஸம்மில்,
ஏறாவூர், இலங்கை.

# பாடம்

ரத்தினம் சாமான் வாங்க கடைக்குப் போனார். மளிகைக்கடையில் செம கூட்டம்.

வேலைக்காரப் பையன் படு சுறுசுறுப்பாக ஓடியாடி வேலை செய்து கொண்டிருந்தான்.

ரத்தினம் கேட்ட பொருட்களைக் கொடுத்து விட்டு பணத்தை வாங்கி கல்லாவில் போட்டவன் மீதி பணத்தைக் கொடுத்தான்.

ரத்தினம் வாங்கி எண்ணிப் பார்த்தார். அந்த பையனும் கவனித்துக் கொண்டிருந்தான்.

நூறு ரூபாய் அதிகம் இருந்தது. பையனுக்கு பக் கென்றது.

ரத்தினம் பேசாமல் பணத்தை பாக்கெட்டில் வைத்துக் கொண்டு அங்கிருந்து அகன்றார்.

பக்கத்து தேநீர் கடையில் நுழைந்து தேநீருக்கு சொல்லி விட்டு காத்திருந்த போது மளிகைக் கடைப் பையனை தேநீர் வாங்க அனுப்பினார் முதலாளி.

“ஐயா... எங்கே என் தவறை முதலாளிகிட்ட சொல்லிடுவீங்களோன்னு பயந்துட்டேன். இந்த வேலையை நம்பி என் வீட்டில் எத்தனை பேர் இருக்காங்க தெரியுமா ஐயா?” என்றான் அவன்.

“அதனால்தான் சொல்லலை. பணத்தை கையாளும் போது நிதானம் தேவை. இன்னைக்கு நடந்ததை ஒரு பாடமா வெச்சுக்க. இந்தா... நீ அதிகமா கொடுத்த இந்த நூறு ரூபாயை எதிர்ல இருக்கிற கோவில் உண்டியல்ல போட்டுட்டு வேலையைக் கவனி.”

பையன் ரத்தினத்தைப் பார்த்து கரம் குவித்தான்.

—

மலர்மதி,
7, 8வது தெரு,
பவர் லைன் சாலை,
ஜோதி நகர்,
ஆவடி,
சென்னை - 600 109
அலைப்பேசி: +91 8667417874



# உலகினை ஆளவா...

*பா வகை* -நேரிசைக் கட்டளை
வெண்பா

உலகினை ஆளவா உண்மையாய்
அன்பில்
நிலத்திலே என்றும் நிலையாய்-நலமாய்
சிறந்திடு வாழ்விலே சிந்தை உயர்ந்தே
அறத்தினில் யாவுமே அன்பு.

உயர்ந்திடு நீயும் உழைப்பில் சிறந்தே
பயனென வாழ்ந்திடு பாங்காய்- நயமாய்
உழவின் உழைப்பால் உலகையே
ஆள்வாய்
பழகிடும் மாந்தமே பண்பு.

—



வாழ்வியல் கவி,
(சா. நாகூர் பிச்சை)
துபாய்.

---

# அதே முகம்

இந்த இருட்டிற்கு
இரண்டு முகங்கள்
ஒன்று தன்னைத்தானே
பார்த்து சிரித்துக் கொள்ளும்
மற்றொன்று
எதிரே நிற்பவரின்
அனைத்து சுபாவங்களையும்
பிரதிபலிக்கும்

தசை நிரம்பிய உடலுக்கு
வெட்கமும்
மானமும் மயிரிழையில்
சிலிர்த்து அடங்கி விடுகிறது

காம்ம் பெருக்க இறுக்கிய
உடல்களுக்கு
வியர்வையின் ஒவ்வொரு துளியும்
அமிர்தம்தான்

சில ஆசைகள்
அதற்கான மௌனங்களென
நிறைந்த செயல்களில்
புத்தனின் சாயலை
மறைந்து நின்று பார்க்கலாம்

காதல்
கவிதை
நீ நான்
எல்லாம் ஒன்றுதான்
ஒவ்வொரு கருவிலும் தோன்றி மறையும்
அதிர்ஷ்டமில்லாத
குழந்தைபேறு போல.....

## இரண்டாம் உலகம்

எனது வீட்டின்
கைப்பிடிச்சுவர்களை பற்றிக்

கொண்டுதான்
எனது மாலை நேரங்களை
கடந்து செல்வேன்
மேலிருந்து பார்க்கையில்
வீடுகளும்
ஆங்காங்கே குழந்தைகளின்
விளையாட்டும்
உண்டதோ இல்லயோ
ஒன்றையொன்று
கடித்தும்
அடித்துமாய்
புரண்டு கொண்டிருந்த நாய்க்குட்டிகள்
இறக்கி விட்ட உரிமையாளரின்
வருகைக்காக
வெறுமென காத்திருக்கும்
இரு சக்கர வாகனங்களென
அனைத்தும்
கீழ் நோக்கியே பார்த்து கடந்து சென்று
கொண்டிருந்தன..
ஒரு போதும் நிமிர்ந்து பார்த்திடவில்லை
கீழே இருப்பது போன்று
அடைபட்டு நகராமலிருக்கும்
ஒரு உலகம்
மேலே இருக்கிறது என்று...!

## மௌனம் கனமானது

நான் பார்க்கின்ற நபரெல்லாம்
இரட்டை தலையுடன்
பயணிக்கின்றனர்....
ஒன்று மொத்தமும் மௌனம்
நிறைந்ததாகவும்
மற்றொன்று சிறு இடைவெளிவிடாது
இதழ்களை கிழித்தெறியும் படியான
உரக்க பேச்சிகளுக்கு பழக்கப்பட்டு
போனதாகவும்...

ஒன்றை ஒன்றை பார்த்து
நகரும் பொழுதெல்லாம்
மௌனமும் குரலும் சற்று வழக்கத்திற்கு
மிஞ்சியே கனமாகிப்போகிறது...

எனது ஒட்டுமொத்த மௌனத்தில்
சரியான வழியில் செல்கிறது மொழிகள்...
மற்றொன்று சீரணிக்க இயலாத
வசைகளை மொழிந்துக் கொண்டே
மெல்ல மெல்ல தலையாட்டி நகர்கிறது
எனது இடது வலதுமாய் கனமேறிய
மௌனத்தலைகள்...

ஒரு இருட்டுக்குள் நடைபயணம்
மேற்கொண்டேன்
சிறு ஆபாச தொடலில் மௌனத்தையும்
களைக்கிறது
ஆழ் இரவு....
அவ்வேளையில் வேதனையில்
கனமேறிபோகிறது
பாவப்பட்ட மௌனத்திற்கு......
காதலாய்...
மோதலாய்....
முடியாத சாதலாய்......

ஒரு குடுவை நீரில் உன் மீச்சிறு மூச்சின்
பரவளையங்களை
தாண்டியும் ஒரு புள்ளியாகி
மௌனத்திரையை கிழிக்கிறது
கனமேறிய மௌனங்களின்
நேற்று முளைத்த விரல் நகங்கள்....

இதயமும் துடிதுடிக்கும்

புஜங்கள் திமிறும்
முடிவுறாத கனத்திலான மௌனங்களில்...

மௌனம் முற்றிலும் கனமானது
எடைக்கல்லில் அடங்காதது
காற்று வெளியில் காணாதது...
ஆனால்
மௌனம் கனமானது...

## தன்முனை

மௌனம் களைவதற்கு
புன்னகை வழி கொடுக்கிறது
அமைதியின் பின்னனியில்
இன்பமும் கண்ணீருமுண்டு

வானம் விரும்பியது
என்னவோ ஒரு நிலவுதான்
அவளை வீட்டில் எப்படி
பூட்டி வைப்பது

நீர் நிரம்பிய குவளைக்கு
ஆயிரம் அர்த்தங்கள்
விழுந்த வானத்தை
எப்படி கை சேர்ப்பது

பட்டால் புரியும் என்பது
பெரியோர் வாக்கு
அடித்தால் மட்டும்தான்
வண்ணம் மாறுகிறது பச்சோந்தி

இயற்கையைப் பற்றி கூறிய
இனியமுது கவிதையுள்ளது
அம்மா என்றெழுதியதும்
மொத்த இயற்கையும் மையில்

## தன்முனைக் கவிதைகள்

முட்கள் அசைவதில்
நேரம் கழிகிறது
வெல்வதும் வீழ்வதும்
தன்னம்பிக்கையின் விரலில்

கவிதையில் முதல்வரி
நீயும் நானும்
வானை வளைக்க
கற்றுத்துருகிறது காதல்

யானையின் உருவில்
பூனையின் பசி
கையேந்தும் இடத்திலெல்லாம்
கடவுளின் இருள் தினம்

ஒரு வண்ணத்தில் பறக்கிறது
கூடு உடைத்த புழு
தோல்வியை உடைத்து
தன்னை செதுக்கியது வெற்றி

கல்வெட்டில் எழுதியதால்
இடமும் காலும் சிறப்பானது
எழுதி முடித்த கைகளில்
எதிர்கால வடுக்கள்

## கதவிற்கு பின்னால் கடவுள்

ஊரெல்லாம் கொண்டாட்டம்
இவன் மட்டும் யாருமன்றி
திண்ணையில் அமர்ந்திருக்கிறான்..

பட்டாடை உடுத்தி
வலம்வரும் அம்மன் ஊர்வலம்
கேட்டுக் கொண்டே
வெளிர் ஆடையில் உலாவருகிறது
நிலவு போர்த்திய அம்மனொருத்தி

இன்றுதான்
இறந்த மகனுக்கு கண்ணீர் அஞ்சலி
செலுத்தியிருப்பார் அப்பா
கலட்டிய தாலியில்
கணவனின் கைரேகை தேடுகிறாள்
மனைவி
இல்லாத அப்பாவின் சைக்கிளில்
கைப்பிடியை பிடித்து கலங்குகிறான்
மகன்

வேட்டு சத்தத்தில் கலங்கிய உள்ளத்திற்கு
ஊருக்கு வெளியே
ஒரு தனிமைக்குடில்
அதில்
யாரும் பார்த்திடாமல்
தாண்டவமாடுகிறார்
தாழிடாமல் வெளியே நடமாடும்
கதவுக்கு பின்னால் ஒரு கடவுள்..

## கொஞ்சம் மிச்சமானது கண்ணீர்

இல்லாத ஏக்கம் அப்டிங்கிறது எப்படி
இருக்கும்
யாராவது உணர்ந்து இருக்கீங்களா...
ஆமா

இருட்டில இல்லாத ஒரே ஒரு மின்மினிப்
பூச்சிய மொத்த இருட்டும் தேடுறமாதிரி
இருக்கும் அந்த தேடல்..

நீங்க நிச்சயம் அத
அனுபவச்சரிக்கீங்களோ இல்லயோ
பக்கத்துல உட்காந்து
அவங்களுக்கு ஆறுதல்
சொல்லிருப்பீங்க..!

அவங்க இருக்க நனச்ச நாட்களை விட
இறக்க நனச்ச நாட்கள்தான்
அதிகம்
அதுக்கு அவங்களே சொல்லிக்கிற
ஒரு ஆறுதல் தான்
நல்லது கண்டிப்பா நடக்கும்னு
நடை மாறாத மந்திரமொன்னு...

எல்லாமே கிடைக்காதானு
அவங்க அழுது முடிச்ச பிறகும்
அவங்களுக்காக
மீண்டும் மீண்டும் அழ தேங்கி கிடக்குது
பிரிய மனசில்லாத எல்லா கண்ணீர்
துளியும்...

—

சே. கார்கவி கார்த்திக்,
நாகப்பட்டினம்.



# என்றும் சுவை

தென்றல் வந்தென்ன
தேன் மலர் பூத்தென்ன !

கண்களில் ஒளி ஏந்தி
காதலும் வந்தென்ன !

பன்னீர்தனை ஏந்தி
வெண்மேகம் சென்றென்ன !

புள்ளும் விளையாடி
புது உலகு சென்றென்ன !

மயிலும் ஆடிவந்து
பரதமும் தந்தென்ன !

குயில் கூட்டங்கள்
இன்னிசை தந்தென்ன !

சின்னஞ்சிறு பறவை
சிரித்துதான் சென்றென்ன !

விண்ணின் இடியோசை
விரைந்துதான் கேட்டென்ன !

கள்ளமில்லா மலர்கள்
வாசத்துடன் மலர்ந்தென்ன !

அன்பான தாய்க்கு
மழலையின் குரலே
என்றும் சுவையாகும் !!

-



எம். என். பாஸ்கரன்,
கிராம நிர்வாக அலுவலர் (ஒய்வு)
மன்னார்குடி.
அலைபேசி: +91 9942949883

---

# கதை கதையாய்

கூறிக் கொண்டிருந்த சுவர்
பேசுவதை நிறுத்திக் கொண்டது
வெள்ளையடித்த பிறகு....

## நிறைந்த பாத்திரத்தை

தரையில் இழுக்கிறேன்
ஒரு கணம் மெய் சிலிர்க்கிறது
நீருக்கு•••

## மெல்ல மெல்ல துகள்கள் படிந்த பின்

தெளியும் நீராக
தெளிகிறேன்
ஒரு பெரும் கோபத்தின் பின்....
மனதின் எந்த மூலையில்
சென்று படிந்ததோ???
கோபம்...

—

கி. கவியரசன்,
செங்கம்.

# பிழைகள் இருக்கலாம் அதில் உங்கள் பிள்ளைகளாகிய நாங்கள் இருப்போம்.

விலை மதிப்பில்லாத தங்கள் நேரத்தை ஒதுக்கி இந்த திறவுகோல் இதழை படித்த அனைவருக்கும் எங்கள் அணியின் சார்பில் நன்றியை உரித்தாக்குகிறோம்.

மன்னார்குடியில் இருந்து வெளியிடப்படும் முதல் மாத இதழ் இது. உள்ளூரில் இருக்கும் படைப்பாளிகளை அடையாளம் கண்டு அவர்களின் படைப்புகளை வெளி உலகிற்கு கொண்டு வரும் வண்ணத்தில் துவங்கிய மாத இதழ்.

நீங்கள் படித்த படைப்புகளில் ஏதும் பிழைகள் அல்லது முரண்பாடுகள் இருப்பின் உங்கள் விமர்சனங்களை முன் வையுங்கள். எதிர்காலத்தில் அதை கருத்தில் ஒண்டு இன்னும் வலுவாக செயல்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்கிறோம்.

நீங்கள் உங்கள் விமர்சனங்களை அனுப்ப...
மின்னஞ்சல்: thiravukolfdbk@gmail.com
பகிரி: +91 8220567322

படைப்பாளர்கள் தங்களின் படைப்புகள் - சிறுகதை, கட்டுரை, கவிதை, ஓவியம் என எங்கள் இதழில் இடம்பெற செய்ய...
மின்னஞ்சல்: thiravukolsubmit@gmail.com
பகிரி: +91 8220567322

தொடர்ந்து பகிரி வழியில் தங்கள் கைபேசிக்கே மின்னிதழைப் பெற...
பகிரி: +91 8220567322

இணையம் மூலம் தரவிறக்கம் செய்ய...

அடுத்த இதழில் இன்னும் சிறப்பான படைப்புகளுடன் உங்களை சந்திக்கிறோம்.

—

கி. மாணிக்கம்,
திறவுகோல் ஆசிரியர், குழு.